1972 சனவரி 28]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களுடைய பகுதிக்கு படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று கோருகிற உரிமை இருக்கிறது. இப்பொழுது உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று கோருகிற உரிமை கனம் அங்கத்தினர்களுக்கு இருக்கிறது. ஆனல், அரசாங்கத்திற்கு அப்படிப்பட்ட வசதி இல்லை.

காசநோய் மருத்துவ மனைகள்

***72 வின—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை-செங்கிப்பட்டி காசநோய் மருத்துவ மனைக்கு 1970-71-ல் தமிழ்நாடு அரசு வழங்கிய மானியத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : செங்கிப்பட்டி காசநோய் மருத்துவ மனைக்கு 1970-71-ல் தமிழக அரசு வழங்கிய மானியத் தொகை ரூ. 37,920.81. அதன் விவரம் பின்வருமாறு—

1968-69-ஆண்டுக்காக	ரூ. 26, 920.81
1970-71-ஆண்டுக்கு முன்பணம்	ரூ. 11,000.00

***73 வின—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் நடமாடும் காசநோய் மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, மதுரை மருத்துவமனைக்கு காசநோயால் பீடிக்கப்பட்டவர்கள் நாற்றுக்கணக்கான பேர்கள் கிராமங்களிலிருந்து தினசரி வருகிருர்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்னல் இடவசதிக்காக பதிவு செய்துகொண்டவர்களுக்குக்கூட இடம் கிடைக்காத நிலைமை இருந்து வருகிறது. ஆகவே, இந்தக் குறையைப் போக்க நடமாடும் காசநோய் மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்தி, கிராமங்களுக்குத் தினசரி சென்று நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, காசநோய் தடுப்புத் திட்டம் என்பது ஒவ்வொரு மருத்துவமனையோடும் தனிப்பட்ட முறையில் இணைக்கப்பட்டு செயலாற்றப்படுகிறது. நடமாடும் மருத்துவமனையாக இயங்குவதில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் காசநோய் தடுப்பக்கு இயங்கி வருகிற உந்து வண்டிகள் மூலமாக மாவட்ட அளவில் நடைபெறுகிறது. ஏதாவது